Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

Regd. No.
TN / CC (S) DN / 119 / 09-11

Lincensed to Post without prepayment
WPP No. TN / CC (S) DN / 51 / 09-11

வேணு : 17 ஆகஸ்டு 2011 கானம் : 1

## "ஸ்ரீ மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு"

ஸ்ரீ க்ருஷ்ண ஜன்மாஷ்டமியை முன்னிட்டு, பதினெட்டாவது வருட ப்ரஹ்மோத்ஸவம் மதுரபுரீ ஆஸ்ரமத்தில் 21-08-2011 முதல் நடைபெற உள்ளதால், பாகவதோத்தமர்கள் வந்திருந்து கதாச்ரவணம், நாமஸங்கீர்த்தனம் மற்றும் உத்ஸவ வைபவங்களில் கலந்துகொண்டு, பகவத் கிருபைக்கும், குரு கிருபைக்கும் பாத்திரமாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
**மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி**

### நிகழ்ச்சி நிரல் / PROGRAMME

| | | | |
|---|---|---|---|
| 21-08-2011 | ஞாயிறு | இரவு | நந்தோத்ஸவம்<br>ஹம்ஸ வாஹனம் |
| 22-08-2011 | திங்கள் | மாலை | சேஷ வாஹனம் |
| 23-08-2011 | செவ்வாய் | மாலை | ஸிம்ஹ வாஹனம் |
| 24-08-2011 | புதன் | மாலை | புன்னைமர வாஹனம் |
| 25-08-2011 | வியாழன்<br>ஏகாதசி | காலை<br>மாலை | விசேஷ திருமஞ்ஜனம்<br>கருடஸேவை |
| 26-08-2011 | வெள்ளி<br>துவாதசி | காலை<br>மாலை | கோவிந்த பட்டாபிஷேகம்<br>யானை வாஹனம் |
| 27-08-2011 | சனி | மாலை | திருக்ஜோத்ஸவம்<br>பரதநாட்டியம் -<br>குமாரி சுவேதா கல்யாண், Dallas,USA |
| 28-08-2011 | ஞாயிறு | காலை<br>மாலை | குதிரை வாஹனம்<br>ஜாலவாஸம்-நாதஸ்வரம்-கடலூர் ஸ்ரீபாலசந்தர் & ஸ்ரீபாலமுருகன் குழுவினர் |
| 29-08-2011 | திங்கள் | காலை<br>மாலை | ஸ்ரீராதாகல்யாணம்<br>தெப்போத்ஸவம் |
| 30-08-2011 | செவ்வாய் | காலை | ரதோத்ஸவம்<br>விடையாற்றி |

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

**Related Websites : www.namadwaar.org**
**Email:contact@namadwaar.org**

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 17 ஆகஸ்டு 2011 கானம் : 1






ஜூலை 12, 2011 - மணிமங்கலம் அரசு உயர்நிலைப்பள்ளி விழா



ஜூலை 15, 2011 - குருபூர்ணிமா தினம் - மதுரபுரி ஆஸ்ரமத்தில் வியாச பூஜை





ஜூலை 8, 2011- திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம நுழைவு வாயில் திறப்பு

# ஜூலை 11, 2011 – ஆஷாட ஏகாதசி
# விட்டலாபுரம் பாண்டுரங்கன் கோவிலில்





ஜூன் 26, 2011 - ஸ்ரீவிபூதி பாபா மணிமண்டபம் கும்பாபிஷேகம், திருவண்ணாமலை



ஜூன் 25, 2011 - பண்ருட்டி வரதராஜ பெருமாள் கோவில் - ராமானுஜம்ஜீ - மஹாமந்த்ர கூட்டு கீர்த்தனை






ஜூலை 9, 2011 - முடிச்சூர் விவேகானந்தர் பள்ளி - ஆசிரியர் பயிற்சி முகாம்



ஜூலை 16, 2011 - சென்னை தியாகராயநகர் ஸ்ரீதாராசந்த் கமலா ஜெயின் பள்ளி

ஸ்ரீ ஹரி:
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 17 ஆகஸ்டு 2011 கானம்: 1

| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 185 | 04 | ஐந்து விதமான சித்தர்கள் | 13 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | அடியார்கள் தங்கிய ஆறு | 16 |
| பாகவத பழம் -17 | 07 | பதினாறரை நாணயங்கள் | 21 |
| சனாதன புதிர் | 25 | மாலே மணிவண்ணா | 30 |
| ப்ருந்தாவன கண்ணன் | 28 | அப்பாலுக்கு அப்பால் | 33 |

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**

**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

வானப்ரஸ்தாஶ்ரம பதேஷ்வபீக்ஷ்ணம் பைக்ஷ்யமாசரேத்

ஸம்ஸித்யத்யாஶ்வ ஸம்மோஹ:ஶூத்த ஸத்வ: ஶிலாந்தஸா

அதிகமாக, வானப்ரஸ்தர்களின் ஆஸ்ரமங்களில் பிக்ஷை ஏற்பதே மிக உயர்வானது. ஏனென்றால் அறுவடை ஆனபின், வயல்களில் இறைந்து கிடக்கும் தானியங்களை பொறுக்கிக் கொண்டு வந்து சமைப்பதான "சில விருத்தி"யால் வாழும் அவர்கள் கொடுக்கும் பிக்ஷை, வெகு விரைவில் சித்தசுத்தியை ஏற்படுத்துகிறது. பிக்ஷை ஏற்பவனிடம் உள்ள மோக மயக்கத்தை, துரத்தி விடுகிறது.

– ஸ்ரீமத் பாகவதம் ஏகாதச ஸ்கந்தம் அத் –18 ஸ்லோ–25

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: தர்பார் தாளம்: ஆதி

பல்லவி

எப்பொழுதும் நான் இப்படியே இருக்க
நீ அருள வேண்டும் கண்ணா கண்ணா

(எப்பொழுதும்..)

அனுபல்லவி

உன் முன் அமர்ந்து உன்னை பாடியும் ஆடியும்
கொஞ்சிக் கொஞ்சி நான் கொண்டாடிட வேண்டும்

(எப்பொழுதும்..)


சரணம்

மாயையில் மூழ்கியோ மனவேதனையினாலோ
பாழுமிந்த உடல் கேட்டினாலோ
வேண்டாத கவலைகள் எனை பற்றிக் கொள்வதாலோ
வாழும் வரை நான் வழுவவே கூடாது

(எப்பொழுதும்..)

பலர், ஒருவரை குரு, குரு, என்று நிர்பந்தித்தாலும், கொண்டாடினாலும், யாருக்கு தான் குரு என்ற எண்ணமே இல்லையோ, அவர்தான் குருவாக இருப்பதற்கு தகுதியானவர்.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி





ஹரி நாம சங்கீர்த்தனம் செய்பவர்களுக்கு வேண்டிய அன்னத்தை உடுப்பி கிருஷ்ணன் கொடுக்கின்றான். வேண்டிய தனத்தை திருப்பதி ஸ்ரீநிவாஸ பெருமாள் கொடுக்கின்றான். அவர்கள் கீர்த்தனத்தை கேட்டு விட்டலன் ஆடி பாடி மகிழ்கின்றான். பிறகு வேண்டுவதற்கு என்ன உள்ளது?

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி



# மதுரமான மஹனீயர் – 185

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

சென்னை நாரதகான சபாவில், ஜனவரி மாதத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பிருந்தாவனமும் நந்தகுமாரனும் என்ற தலைப்பில், ஸ்ரீமத்பாகவதத்தின் பத்தாவது ஸ்கந்தத்தில் இருக்கும் கண்ணபிரானின் மதுரலீலைகளை எடுத்து உபன்யாசம் செய்து வந்தார்கள். திரளாய் அன்பர்கள் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

தொடர்ந்து பிரயாணங்கள் பல செய்து வந்ததால், இந்த உபன்யாசம் நடந்து வருகையிலேயே, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கு (Back Pain) முதுகு வலி இருந்து வந்தது. அதை அவர் பொருட்படுத்தாமல் தினமும், பல மணி நேரங்கள் உபன்யாசம் செய்து வந்தார்.

உபன்யாசம் முடிந்த உடனே, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க, எர்ணாகுளம் சென்று, நாமத்வாரில் தங்கி, ஆயுர்வேத ட்ரீட்மென்ட்(Treatment) எடுத்துக் கொண்டார்கள். நாமத்வாரில் தங்கி இருந்த ஸ்ரீஸ்வாமிஜி, எப்பொழுதும் ஜபம், தியானம், கீர்த்தனம் என்றே இருந்து வந்தார். தினமும் மாலையில் பூரணதீஸ்வரர் கோயிலுக்கு செல்வார். தினமும் கோயிலில் உள்ள யானைக்கு நிறைய பழங்கள், வெல்லம், காய்கறிகள் எல்லாம் கொடுத்து மகிழ்வார்.

தினமும் மகாமந்திரம் சொல்லிக்கொண்டே, கோயிலை வலம் செய்து வருவார். அந்த கோவில் ஸ்ரீமத்பாகவதத்துடன் சம்பந்தப்பட்ட கோவில். ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள சந்தான கோபால உபாக்யானம்தான் அந்த கோவிலின் ஸ்தலபுராணம்.

ஒருநாள் ஸ்ரீஸ்வாமிஜி தியானம் செய்து

கொண்டிருக்கும்பொழுது, அந்த கோவிலில் உள்ள யானை, ஒரு கணம், மிக அழகான மகாகணபதியாக மாறி தரிசனம் கொடுத்தார். அதை பார்த்தவுடன் ஸ்ரீஸ்வாமிஜியின் உடலில் சிறிது நேரத்திற்கு நடுக்கம் காணப்பட்டது. இது ஜனவரி 24 அன்று நடந்தது .

ஒருநாள் கழித்து ஜனவரி 26 அன்று, அதே போல் ஸ்ரீஸ்வாமிஜி தியானம் செய்து கொண்டிருக்கையில், திருமலையில் ஸ்ரீனிவாச பெருமாளின் சன்னதியின் தரிசனம் ஏற்பட்டது. அப்பொழுது அதில், ஸ்ரீஸ்வாமிஜியின் பெரிய அண்ணா ஸ்ரீநிவாஸ பெருமாளை தரிசனம் செய்வதும் தெரிந்தது. இதை தன்னுடன் இருந்த ஹரிஜியிடம் ஸ்ரீ ஸ்வாமிஜி தெரிவித்தார்கள்.

ஹரிஜியும், ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீஸ்வாமிஜியின் அண்ணாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்பொழுது அவர், இன்று காலையில்தான் திருப்பதியிலிருந்து வந்ததாக தெரிவித்தார். “நேற்று திருமலையில் எம்பெருமானின் தரிசனம் நன்றாக கிடைத்தது” என்றும் தெரிவித்தார். இதை அறிந்தவுடன், ஹரிஜி அடைந்த வியப்பிற்கு அளவே இல்லை. ஹரிஜி என்னிடம் தெரிவித்ததை, நானும் உங்களுடன் மகிழ்வுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

நாம் இருக்கும் இடத்தை சுத்தமாக வைத்து கொள்ளவேண்டும். நாம் உண்ணும் உணவு சுத்தமாக இருக்கவேண்டும். நாம் உடுக்கின்ற உடைகள் சுத்தமாக இருக்கவேண்டும். நாம் நம் உடலை சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும். இவ்வளவு இருந்தும் மனது சுத்தமாக இல்லை என்றால் ஒரு பலனும் இல்லை. மனது சுத்தமாக க்ருஷ்ண கீர்த்தனம் ஒன்றே வழி.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: பலர் மணிக்கணக்காக பூஜை செய்கின்றார்கள். நான் அப்படியெல்லாம் செய்வதில்லை. விடாமல் நாமகீர்த்தனம் மட்டும்தான் செய்து வருகின்றேன். உண்மையில் பூஜை என்றால் என்ன?

பதில்: நாம், தெய்வத்தினுடைய அன்பை, அதாவது அந்த தெய்வத்தினுடைய ப்ரியத்தை பெறுவதற்கு ஆசைப்படுகின்றோம். என்ன செய்தால், அவர் சந்தோஷமடைந்து, நம்மிடம் ப்ரியம் செய்வார் என்பதை ஆலோசித்து, அதை சாஸ்திரம் ஏற்றுக் கொள்ளும் வழியில் செய்து, அவருடைய அன்பை பெறும் வழிமுறைகளுக்கே, பூஜை என்று பெயர்.

கேள்வி: உபநிடதங்கள் நம்மை விழித்துக் கொள் என்று கூறுகின்றதே. நாம் ஏற்கனவே விழித்து கொண்டுதானே உள்ளோம். விழித்து கொள் என்பதற்கு உண்மையான பொருள் என்ன?

பதில்: ஒருவருடன் நாம் வெகு காலமாக பழகியிருப்போம். திடீர் என்று அவர் நல்லவரில்லை என்று தெரிந்து கொண்டால், நாம் என்ன சொல்வோம். அப்பாடா! இப்பொழுதுதான் நான் விழித்துக் கொண்டேன் என்போம்.

மனிதனுக்கு தூக்கம், விழிப்பு, கனவு என்று மூன்று அவஸ்தைகள். நாம் தூக்கத்திலும், கனவிலும், வாஸனைகளை சேர்த்து கொள்வது கிடையாது. உண்மையில் விழித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான், அதிகமான வாஸனைகளை சேர்த்துக் கொள்கிறோம். இந்த உலகம் பொய் என்பதை எப்பொழுது உணருகின்றோமோ, அதுதான் உண்மையான விழிப்பு நிலை ஆகும். அந்த விழிப்பு நிலை ஏற்பட்டு விட்டால் தூக்கமும் ஏற்படாது. கனவும் ஏற்படாது.

கேள்வி: நான் வெகுகாலம் ஜபம் செய்து வருகின்றேன். எனக்கு இன்னும் நாம சித்தி ஏற்படவில்லையே? என்ன காரணம்?

பதில்: நாம், எந்த ஸாதனை செய்தாலும், நான் செய்கின்றேன் என்ற எண்ணத்துடன் செய்தால், அதனால் ஒரு பலனும் ஏற்படாது.



# பாகவத பழம் (16)

**பாகம் 2 – அத் 5**

– ஸ்ரீஸ்வாமிஜி

முற்பிறவியில் என் தாயார், வேதத்தைப் படித்தும் அதன் சாரமான ஹரிகீர்த்தனம் செய்தும் வாழ்ந்து வந்தவர்களின் வீடுகளில், குற்றேவல் செய்து வந்தாள். பாவம், அவளோ இளம் விதவை. எனக்கு அப்பொழுது வயது ஐந்துதான். அவர்களுடைய வீடுகளைப் பெருக்கி, மெழுகி, பாத்திரங்களைத் தேய்த்து, அதனால் கிடைக்கக்கூடியதை வைத்துக்கொண்டு என்னையும் காப்பாற்றி வந்தாள். ஒருசமயம், சாதுர்மாஸ்ய காலம் வந்தது. சாதுர்மாஸ்யம் என்றால் என்ன? ஒரு வருடத்திற்கு இரண்டு அயனங்கள். அயனம் என்றால் வழி. சூரியன் தெற்குப் பக்கமாக நகரும்பொழுது தக்ஷிணாயனம். சூரியன் வடக்கே நகரும்பொழுது உத்தராயனம். நம்முடைய ஒரு வருஷம் தேவர்களுடைய ஒருநாள். உத்தராயனம் அவர்களுடைய பகல்பொழுது. தக்ஷிணாயனம் அவர்களுடைய இரவுப்பொழுது. நம்முடைய ஒரு மாதம் அவர்களுடைய இரண்டு மணிநேரம். அதில் ஆடி மாதத்திலிருந்து அவர்களுடைய இரவுப்பொழுது ஆரம்பம். அக்ஞானத்தில் இருக்கும் ஜீவன்களான நாம் இரவை தூக்கத்தில் கழிப்போம். தூக்கம், மூப்பு, பசி, தாகம், வியாதி, மரணம் இவைகள் இல்லாத தேவர்கள் என்ன செய்வார்கள்? யோக நித்திரையில் இருப்பார்கள். பூவுலகத்திலும் யோகீஸ்வரர்கள் இருப்பது யோக நித்திரையில்தான். அப்படி தேவர்கள் யோகத்தில் இருக்கும்பொழுது, ஜீவன்களும் யோகத்திலிருந்து, அதாவது இறைவனை அடைவதற்கு, அவரவர்கள் பின்பற்றக்கூடிய உபாசனைகளை செய்வது நல்ல பலனைத் தருமாம்.

உலக விஷயமாக இருந்தாலும் தெய்வ வழிபாடாக இருந்தாலும் நாம் ஆரம்பிக்கும்பொழுது என்ன செய்வோம்? முதலில் குருவை வணங்குவோம் அல்லவா? அதனால்தான் ஆடி மாதத்தில் வியாஸரை

வழிபடும் வியாஸ பௌர்ணமியையும், அவரவர்கள் தங்கள் குருவை வழிபடும் குருபௌர்ணமியையும் கொண்டாடுகின்றோம்.

குருவை வணங்கிய பிறகு, எந்த ஒரு காரியமும் விக்னமில்லாமல் நடைபெற விக்னேஸ்வரர் வழிபாடு; அதுதான் ஆவணி மாதத்தில் வரக்கூடிய விநாயக சதுர்த்தி. நம்முடைய குலத்தில் வந்த பித்ருக்களை வணங்கும் மஹாளயபக்ஷம் புரட்டாசி மாதம். ஐப்பசி மாதம் அதிகாலையாக ஆகி விடுவதால் துலாஸ்நானம். கார்த்திகை மாதம் தீபம் ஏற்றுகிறோம். மார்கழி மாதம் அதிகாலையில் நாம சங்கீர்த்தனம் செய்து ஆலய வழிபாடு செய்கின்றோம். தை மாதம் சூரியன் உதயமாகிவிடுவதால், அவரவர்கள் சூரியன், மழை, பசு இவைகளை வணங்கி தங்கள் தங்கள் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். இந்த சாதுர்மாஸ்யம் என்ற விரதத்தை எல்லோருமே அனுஷ்டிக்க வேண்டும் என்றாலும் கூட, முக்கியமாக துறவிகளும், முழுவதுமாக தங்களை இறை வாழ்க்கைக்காக அர்ப்பணித்துக் கொண்ட ஸாதுக்களான பாகவதர்களும் அனுஷ்டிக்க வேண்டும்.

அப்படி சாதுர்மாஸ்யத்தை சிலர் நான்கு மாதங்களோ, அல்லது நான்கு பக்ஷங்களோ (2 மாதங்கள்) அனுஷ்டிப்பார்கள். அப்படி அனுஷ்டிக்கும்பொழுது, சேர்ந்தாற்போல் ஒரே இடத்திலேயே தங்கியிருக்கவேண்டும். ஏன்?

அது மழைக்காலமாக இருப்பதால் பூமியில் சிறு சிறு புழுக்கள், புல் தளிர்கள் எல்லாம் தோன்றும். அவைகளை மிதித்து இம்சை செய்யக்கூடாது என்பதும் ஒரு காரணம். தவம் இல்லாத சாதுக்களின் பக்தி பிரசாரம், கேட்பவர்கள் ஹ்ருதயத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டு வராது. ஓயாமல் சுற்றி தர்ம பிரசாரம் செய்து வரும் ஸாதுக்கள், ஓரிடத்தில் தங்கி தவம் இயற்றட்டும் என்பதும் ஒரு காரணம். மழைக்காலத்தில் சஞ்சாரம் செய்தால், வியாதி வந்து சிரமப்பட நேரிடும் என்பதும் ஒரு காரணம். அந்தக் காலத்தில் பெரிய பெரிய நதிகளுக்கு

பாலங்கள் இருக்காது. அந்த நதிகளைக் கடந்து போவதும் மிகவும் கடினமாக இருக்கும். இந்த விரத காலத்தில் உண்டியையும் சுருக்க வேண்டும். சாஸ்திரத்திற்குத்தான் நம்மீது எவ்வளவு கருணை

*இத்தகைய ஸாதுக்களை நாமாக தேடித்தான் அடைய முடியுமா என்ன? நன்றாகப் படித்திருக்கும் வித்வானுக்கும் கூட நல்ல குரு கிடைப்பார் என்று சொல்ல முடியாது. ஒன்றுமே படிக்காத முட்டாளுக்கு குரு கிடைக்காமல் போவார் என்றும் சொல்ல முடியாது. நல்ல குரு கிடைப்பதற்கு தெய்வ ஸங்கல்பமே காரணம்.*

பார்த்தீர்களா?

நாரதர் தொடர்ந்தார். அப்படி ஒரு சாதுர்மாஸ்ய காலம் வந்தது. அந்த சமயமாகப் பார்த்து பாகவத தர்மத்தை அனுஸரிக்கும் சில ஸாதுக்கள் அந்த ஊருக்கு தெய்வச் செயலாக வந்து சேர்ந்தார்கள். அந்த மஹான்கள் தங்களுடைய சாதுர்மாஸ்ய விரதத்தை, தங்கள் ஊரிலேயே அனுஷ்டிக்க வேண்டும் என்று ஊர் பெரியவர்கள் பிரார்த்தித்துக் கொண்டார்கள். அந்த ஸாதுக்களும், கிராமத்தவர்களின் அன்பான வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அதற்கு சம்மதித்தார்கள்.

அந்த ஊரின் எல்லையில் ஒரு மடத்தில், அந்த ஸாதுக்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்வபாவத்திலேயே என் தாயார் ஸாது. பசுக்கள், வேதம் படித்த பெரியவர்கள், ஸாதுக்கள் இவர்களிடம் அளவு கடந்த பக்தி உண்டு. என் தாயார் அதனால் அந்த ஊரில் உள்ள பெரியவர்களிடம், அந்த ஸாதுக்கள் தங்கியிருக்கும் இடத்தைக் கூட்டி, மெழுகி, சுத்தம் செய்து கோலம் போடுதல் போன்ற கைங்கர்யத்தைக் கேட்டு பெற்றுக்கொண்டாள். அந்த ஊரின் பெரியவர்களும் என்

அன்னையைப் பற்றி நன்றாக அறிந்தவர்கள். ஆகையால், அவர்களும் ஸம்மதித்தார்கள்.

அவ்வளவுதான்! என் அன்னை அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அன்று இரவு முழுவதும் உறங்கவே இல்லை. அதிகாலை எப்பொழுது வரும், ஸாதுக்கள் சேவையும் தரிசனமும் நமக்குக் கிடைக்கப்போகின்றதே, என்ன பாக்கியம் செய்தோம்!

இத்தகைய ஸாதுக்களை நாமாக தேடித்தான் அடைய முடியுமா என்ன? நன்றாகப் படித்திருக்கும் வித்வானுக்கும் கூட நல்ல குரு கிடைப்பார் என்று சொல்ல முடியாது. ஒன்றுமே படிக்காத முட்டாளுக்கு குரு கிடைக்காமல் போவார் என்றும் சொல்ல முடியாது. நல்ல குரு கிடைப்பதற்கு தெய்வ ஸங்கல்பமே காரணம்.

நான் சிறுவனாக இருந்த காரணத்தால், தாயார் என்னையும் உடன் அழைத்துச் சென்று, மடத்தின் ஒரு மூலையில் அமர்த்திவிட்டு தன்னுடைய கைங்கர்யத்தைச் செய்ய ஆரம்பிப்பாள். தூக்கக்கலக்கத்தில் என் தலை ஆடிக்கொண்டிருக்க, நான் அமர்ந்திருப்பேன். என் தாயார் பரிவுடன் என்னைப் பார்த்து இத்தகைய மஹான்களுடைய தரிசனம் துர்லபமானது. நாம் தேடினாலும் கிடைக்காது. உலகில் தெய்வம் கூட துர்லபமாகாது. ஊருக்கு ஊர், கிராமத்திற்கு கிராமம், வீட்டிற்கு வீடு தெய்வம் குடிகொண்டுள்ளது. அப்படியிருக்க தெய்வம் எப்படி துர்லபமாகும்? பின் எதுதான் துர்லபம் என்றால், தெய்வத்தைப் பார்த்து, அதனோடு பழகி, அதனோடு பேசக்கூடிய மஹான்கள் தான் துர்லபம் என்று, எனக்கு அவ்வப்பொழுது ஸாதுக்களின் பெருமைகளை எல்லாம் எடுத்துக் கூறினாள்.

என் தாயாரின் நிர்ப்பந்தத்தினால் ஒருநாள் அவர்கள் வரும்பொழுது எழுந்து நின்றேன். மறுநாள் அவர்கள் வரும்பொழுது அவர்களைப் பார்த்து கைகளைக் கூப்பிக்கொண்டேன். அதற்கு

அடுத்த நாள் அவர்களைப் பார்த்து, எண் ஜாண் உடம்பின் எல்லா அங்கங்களும் பூமியில் படும்படி விழுந்து சேவித்தேன். அடுத்த நாள் அவர்கள் நீராடச் செல்லும்பொழுது உடன் சென்றேன். அதற்கு அடுத்த நாள், அவர்கள் நீராடிய துறையில் அவர்கள் திருமேனியில் பட்ட நீர் என் மீது படும்படியாக நீராடினேன். இப்படியாக, அவர்கள் கூட கூட ஓடி அவர்கள் இருக்கும் இடத்திலேயே தங்கியிருந்தேன்.

வேலை செய்யும் வீடுகளில் என் தாயார் தன் வேலைகளை முடித்துவிட்டு வருவாள். அங்கு அவர்கள் கொடுத்த பழைய அமுது, குழம்பு எல்லாம் எடுத்து வருவாள். தான் முதலில் உண்டால், எங்கு எனக்கு இல்லாமல் போய்விடுமோ என்ற கவலையால் முதலில் எனக்குக் கொடுத்து, நான் உண்பதைக் கண்டு மகிழ்ந்து பிறகு தான் உண்ணுவாள். இப்படியாக நாட்கள் போய்க் கொண்டிருந்தன.

ஒருநாள் வேலை செய்கின்ற வீட்டில், என்ன அதிகப்படி வேலையோ தெரியவில்லை. என் தாயார் வருவதற்கு வெகுநேரம் ஆயிற்று. என் வயிற்றை பசி கிள்ளி எடுத்து வாட்டியது. அடிக்கடி வாசலிற்குச் சென்று என் தாயாருடன் வரக்கூடிய உணவை எதிர்பார்த்திருந்தேன். வெகுநேரம் ஆகியும் என் தாயார் வரவில்லை. என்னுடைய நிலையைப் பார்த்த அந்த ஸாதுக்கள் சாப்பிட்டது போக மீதம் இருந்ததை எனக்குக் கொடுத்தார்கள். இதை நான் சாப்பிடலாமா? என்று கேட்டு அவர்களுடைய அனுமதியைப் பெற்று உட்கொள்ள ஆரம்பித்தேன்.

ஸாதுக்களுக்கு, வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்பது கிடையாது. எல்லோரையும் சமமாகப் பார்க்கக் கூடியவர்கள். இருந்த போதிலும் என்னிடம் ஒரு விசேஷமான கருணையைச் செய்தார்கள். நான் சாப்பிட்ட அன்னம் ஸாதுக்களுடைய உச்சிஷ்டான்னம். அதனுடைய மஹிமை எனக்குத் தெரியாது. அது எனக்குள் ஒரு மாயா ஜாலத்தை நிகழ்த்த ஆரம்பித்தது.

(கனியும்)

## வருடாந்திர கூட்டம் (Annual General Meeting)

கீழ்க்கண்ட அறக்கட்டளைகளின் வருடாந்திர கூட்டம் (Annual General Meeting) கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அறக்கட்டளைகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அறக்கட்டளைகளின் சென்ற வருட செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. தணிக்கை செய்யப்பட்ட வருடாந்திர செலவு கணக்கும் நிர்வாகிகளின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

| அறக்கட்டளையின் பெயர் | தேதி |
|---|---|
| ♦ குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்<br>♦ ஸ்ரீ சாந்தீபனி குருகுல டிரஸ்ட் | ஜூலை 12 , 2011 |
| ♦ குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்டு | ஜூலை 18 , 2011 |
| ♦ சைதன்ய மஹாபிரபு நாம பிக்ஷா கேந்திரா<br>♦ ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமன் நினைவு திராவிட வேத ஆகம பாடசாலை<br>♦ ஜய ஹனுமான் ஸேவா டிரஸ்ட் | ஜூலை 19 , 2011 |

குருவிற்கு உட்பட்டே எப்பொழுதும் சீடன் இருக்க வேண்டும். சீடன், தானே, குருவாகவோ, குருவை மிஞ்சவோ பார்க்க கூடாது. அண்ணனாக ஒருவன் பிறக்கின்றான். தம்பியாக ஒருவன் பிறக்கின்றான். தம்பி எப்பொழுதும் தம்பியாகதான் இருக்க முடியும் ; அண்ணனாக முடியாது அல்லவா! அதுபோல்தான் இதுவும்.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

# ஐந்து விதமான சித்தர்கள்

—பத்மபாதர்

ஒரு ஜீவனுக்கு தெய்வத்தின் அருள் நேரிடையாகவோ அல்லது குருமுகமாகவோதான் ஏற்படும். தெய்வத்திடமிருந்து அப்படி நேரிடையாக ஏற்படுவது என்பது வெகு சிலருக்குத்தான் நடக்கும். பெரும்பாலான பக்தர்களுக்கு குருமுகமாகத்தான் இறை அருள் சித்தித்து ஞானம் ஏற்படும். இதில் இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக ஏற்படும் என்றாலும், பொதுவாக இப்படி ஏற்படும் விதத்தை ஐந்து விதமாக பிரித்து கூறுவார்கள் பெரியோர்கள்.

இதில் முதல் நிலையில் வருபவர்கள் நித்ய ஸித்தர்கள். இவர்கள் தெய்வத்தின் அம்சமாகவோ, அல்லது உபதேவதைகளின் அம்சமாகவோ, அல்லது மஹாபுருஷர்களின் அம்சமாகவோ உலகில் தோன்றுவார்கள். இவர்களுக்கு சாஸ்திர, இதிஹாஸ, புராணங்களை படித்து பக்தி வர வேண்டிய அவசியமில்லை. மற்றொருவருடைய பேச்சைக் கேட்டு ஞான, பக்தி, வைராக்கியங்கள் வர வேண்டிய அவசியம் இல்லை. இவர்கள் பிறக்கும் பொழுதே தெய்வாம்சத்துடன் பிறப்பார்கள். அப்படியே இவர்கள் ஒரு குருவை அடைந்தாலும், அதுவெல்லாம் ஒரு

> நித்ய ஸித்தர்கள் ஒரு குருவை அடைந்தாலும் அதுவெல்லாம் ஒரு சம்பிரதாயத்திற்காகதான். ராமர் வசிஷ்டரை அடைந்தது போலும் கிருஷ்ணர் சாந்தீபனியை அடைந்தது போலும்தான். இவர்கள் உலகிற்கு வழிகாட்ட வந்தவர்கள். இவர்கள் தங்களுடன் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டவர்களை கூட பவித்ரமாக்கி விடுவார்கள்.

சம்பிரதாயத்திற்காகதான். ராமர் வசிஷ்டரை அடைந்தது போலும், கிருஷ்ணர் சாந்தீபனியை அடைந்தது போலும்தான். இவர்கள் உலகிற்கு வழிகாட்ட வந்தவர்கள். இவர்கள் தங்களுடன் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டவர்களை கூட பவித்ரமாக்கி விடுவார்கள். இவர்கள், இந்த உலகத்திற்கு வந்து தெரிந்து கொள்ள வேண்டிய தெய்வீக விஷயங்கள் எதுவும் கிடையாது.

மந்திர சித்தர்கள் என்று ஒரு சிலரை கூறலாம். இவர்கள் ஒரு குருவை அடைவார்கள். இவர்கள் குருவை அடைவது என்பது எப்படி தெரியுமா? நாம் நமக்கு தெரிந்த ஒரு பாட்டை மறந்து விடுகின்றோம். எவ்வளவு ஞாபகப்படுத்தி பார்த்தாலும் நினைவிற்கு வரவே இல்லை, என்ன செய்வோம்; தவிப்போம்; நெஞ்சில் இருக்கின்றது; ஆனால் நினைவிற்கு வர மாட்டேன் என்கின்றது என்போம். அப்பொழுது, தற்செயலாக யாராவது முதல் அடி எடுத்து கொடுத்து விட்டால் போதும், அவ்வளவுதான், அடுத்த வரிகள் எல்லாம் தானாகவே ஞாபகத்திற்கு வரும். அதுதான் இவர்களின் நிலை. ஒரு மஹாபுருஷரை அடையும் வரையில் தன்னிலை பற்றி அறியாமல் இருப்பார்கள். ஒரு மஹாபுருஷரை அடைந்து, அவர்களிடமிருந்து ஒரு மந்திரத்தை உபதேசமாக பெற்றவுடன், அதை தீவிரமாக ஜபம் செய்து சித்தியடைந்து விடுவார்கள். இவர்களுக்கு, ஜபம் சித்தியாவதற்கு பெரிய சிரமங்கள் இருக்காது. சுலபத்தில் சித்தி ஏற்பட்டு விடும்.

க்ருபா சித்தர்கள் என்பவர்கள் சிலர். இவர்கள் ஒரு மஹாபுருஷரையோ தெய்வத்தையோ அண்டி வாழ்வார்கள். இவர்கள் செய்யும் தன்னலமற்ற சேவையையோ, நல்ல ஆத்ம குணங்களையோ, பணிவையோ, அல்லது அந்த குரு அல்லது தெய்வத்திடம் கொண்டுள்ள ஏகாந்தமான பக்தியையும், விசுவாசத்தையும் பார்த்து, அந்த தெய்வத்திற்கு அல்லது அந்த குருவிற்கு, அவர்கள்மேல் ஒரு அன்பும் கருணையும் ஏற்படும்.

அந்த கருணை அவர்களை உடனடியாகவோ, அல்லது கொஞ்சம் கொஞ்சமாகவோ, அல்லது தகுந்த காலத்திலோ அவர்களுக்கு சித்தியை கொடுத்து விடும். இவர்களுக்கு எந்த சாதனையும் தேவையில்லை. சாஸ்திர விசாரமும் தேவையில்லை. இவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், இவர்கள் அடைந்த க்ருபையை ஸ்மரித்து கொண்டே இருக்க வேண்டியது மட்டுமே.

ஹட சித்தர்கள் என்பவர்கள் சிலர். இவர்கள் இறைவனுடைய கிருபையை அடைய வேண்டி ஹடம் செய்வார்கள். சாப்பிடாமல் பல நாள் உபவாசம் இருப்பார்கள். தூங்காமல் இருப்பார்கள். ஒரு காலில் நின்று கொண்டு தவம் செய்வார்கள். மூச்சை கும்பகம் செய்வார்கள். பலவிதமான ஆசனங்கள் போட்டு மணிக்கணக்காக உட்கார்ந்து பழகுவார்கள். மொத்தத்தில் அடம். அதாவது எப்படியாவது, பிடிவாதம் செய்து முட்டி மோதி பகவானுடைய அருளை பெற்று விடுவார்கள். இப்படி முயல்பவர்கள், சற்று ஜாக்கிரதையாக இல்லாமல் இருந்தால், நீரின் மேல் நடப்பது, ஆகாயத்தில் பறப்பது, நினைத்த பொருளை வரவழைப்பது, நீண்ட நாட்கள் இளமையுடன் வாழ்வது போன்ற ஸித்திகளில் மாட்டி கொண்டு விடுவார்கள்.

கடைசியாக வருபவர்கள் ஸ்வப்ன சித்தர்கள். இவர்களுக்கு தெய்வம் அல்லது குருவினுடைய அருள், கனவில் ஏற்படும். அதன் பிறகு, அவர்கள் வாழ்க்கை முழுவதும் தெய்வீகமாக மாறி விடும். அவர்கள், அடுத்தடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதும், ஸ்வப்னத்திலேயே அறிவிக்கப்படும். அதோடு மட்டுமல்லாமல் பின்னால் நடக்கக்கூடிய பல விஷயங்கள், மேலும் அவர்கள் அறிந்து கொள்ள ஆசைப்படும் விஷயங்கள் எல்லாம் அவர்களுடைய கனவிலேயே தெளிவாக்கப்படும். நேரில் இல்லாமல், இப்படி ஸ்வப்னத்தின் மூலமாக, இறை அல்லது குரு அருளை பெற்று சித்தி அடைந்தவர்களே ஸ்வப்ன சித்தர்கள் ஆவார்கள்.

## அடியார்கள் தங்கிய ஆறு

– வி.ஜானகிராமன்

திருஞானசம்பந்தர் தன் சிவனடியார்களுடன் மயிலையில் உள்ள கபாலீஸ்வரரை தரிசனம் செய்ய வந்தார். அப்படி வரும்பொழுது திருவான்மியூர் வந்து, அங்கு கோவில் கொண்டுள்ள மருந்தீஸ்வரரை பாடிவிட்டு கபாலீஸ்வரம் வந்தார். அப்படி வரும்பொழுது, நடுவில் ஓடும் ஒரு சிற்றோடையின் கரையில் தன் அடியார்களுடன் ஓய்வு எடுத்துக் கொண்டார். தன் அடியார்களுடன் அந்த சிற்றோடையின் கரையில் ஓய்வு எடுத்ததால்தான், அந்த ஆற்றிற்கு அடியார்கள் தங்கிய ஆறு என்ற பெயர் வந்தது. அதுவே காலகட்டத்தில் அடையார் என்று மருவி விட்டது. அந்த பகுதிக்கும் அடையார் என்ற பெயர் வந்து விட்டது. அந்த அடையாறு இந்த (அடையார் என்ற) இடத்தில்தான் கடலில் கலக்கின்றது. இன்று தமிழிசை கல்லூரி அமைந்துள்ளதே அதன் பின்புறத்திலிருந்து பார்த்தால், இந்த அடையாறு கடலில் கலக்கும் சங்கமத்தை கண்டு ரசிக்கலாம்.

SRI HARI:

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

**Buddies**
Infotech Pvt Ltd

OUR SOLUTIONS

- WEB DEVELOPMENT
- SOFTWARE DEVELOPMENT
- WEB MARKETING
- MOBILE SOLUTIONS

Buddies Infotech Pvt Ltd
KG Marina Bay,No.75 & 77, Ground Floor,
Santhome High Road,Santhome.
Chennai 600 004
Phone: +91-44-43033313

**E-mail:** contact@buddiesinfotech.com

<u>சனாதனப் புதிர் - பகுதி - 30</u>

( விடைகள் அடுத்த இதழில்)
–ஆத்ரேயன்

1. இந்த ஆறு குணங்களை ஒரு பொழுதும் விடக்கூடாது. அந்த குணங்கள் எவை?
2. இந்த எட்டு குணங்கள் மனிதனை மேன்மைபடுத்துகிறது. அந்த குணங்கள் யாவை?
3. இந்த பத்து பேர்கள் தர்மத்தை அறிவதில்லை. அவர்கள் யார்?
4. இரண்டு எழுத்துள்ள ம்ருத்யுவின் வழி என்ன? மூன்று எழுத்து உள்ள பிரம்மத்தின் வழி என்ன?
5. எப்பொழுது சொல்லப்படும் பொய் பாபம் ஆகாது? தீங்கு செய்யாது?

OUR HUMBLE PRANAMS TO SRI SWAMIJI

<u>WE HANDLE ALL TRAVEL RELATED SERVICES</u>


1. DOMESTIC INTERNATIONAL AIR TICKETING
2. VISAS / PASSPORT
3. INSURANCE
4. FOREIGN EXCHANGE
5. HOTEL RESERVATION & RENT A CAR SERVICES
6. OUTBOUND & INBOUND TOUR PACKAGE

<u>PL CONTACT</u>

**EURO WORLD TRAVEL PVT. LTD**

26, FIRST FLOOR, C.P.RAMASWAMY ROAD, ALWARPET,
CHENNAI - 600018. Ph - 9382846979 Ph- 24661228/29, 24671228/29,
24993609/4629 Email - eurotravel@vsnl.net/euroworldtravel@gmail.com

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Limited**

# பாலகர்களுக்கு ஒரு கதை



## பதினாறரை நாணயங்கள்

ஒரு சமயம் காகாசாஹேப் தீக்ஷித் என்பவர், ஷீரடி பாபா அவர்களின் சொற்படி, பால்சாகேப் என்பவருடன் சேர்ந்து, ஏகநாத் பாகவதத்தின் இரண்டாவது அத்தியாயத்தை பாராயணம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது காகாசாஹேப்பிடமிருந்து தக்ஷிணையாக பதினாறரை ரூபாய் பெற்று வரும்படி, பாபுசாகேப் என்ற பக்தரை ஷீரடி பாபா அனுப்பி வைத்தார். அந்த சமயம் காகாசாகேப்பிடம் ஒரு ரூபாய் மட்டுமே இருந்தது. அதுவும் ஷீரடி பாபா அவருக்கு குரு பூர்ணிமா அன்று கொடுத்த ஒரு ரூபாய்தான். வேறு பணம் எதுவும் அவரிடம் அப்பொழுது இல்லை.



பாபாவின் கோரிக்கை வித்தியாசமாக இருக்கிறதே! பதினாறரை ரூபாய் தக்ஷிணை! என்ன அது? இப்படியாக காகாசாகேப் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்து பாபாவின் வித்தியாசமான கோரிக்கையை நினைக்கலானார். சற்று நேரத்திற்கு பின், அவருக்கு பாபா இன்று தாம் பாராயணம் செய்தவற்றிலிருந்து தமக்கு ஏதாவது கூற விரும்புகிறாரோ என்று தோன்றியது. மீண்டும் பாராயணத்தை தொடர்ந்த காகாசாகேப், அதில் ரிஷப முனிவரின் புத்திரர்களான நவ யோகிகளின் பாகவத தர்ம விவரண வரிகளான “காயேன வாசா” என்றவற்றை வாசிக்கலுற்றார்.

இந்த வரிகளை அவர் படிக்க முயலுகையில், இன்னொரு பக்தர் வந்து பாபா பாபுசாகேபை அழைப்பதாக கூறி விட்டு, சென்றார். ஆக

இவ்வரிகளுக்கும் பாபா கேட்ட தக்ஷிணைக்கும் சம்பந்தம் இருக்க வேண்டும். அப்படியே, காகாசாகேப்பும், “காயேன வாசா” ஸ்லோகத்திலுள்ளவற்றை நன்றாக சிந்திக்கலானார். அதிலுள்ள விவரங்களை எண்ணலானார். காயா, வாச:, மனஸ், தேகம்-1, மனசு-1 , பேச்சு-1, புத்தி-1, நான் (EGO) 1 , கர்மேந்திரியங்களும் ஞானேந்திரியங்களும் 5+5=10, ப்ரக்ருதி 0.5, இவற்றை கூட்டினால் மொத்தம் 15.5 பதினைந்தரைதான் வந்தது. ஆனால் பாபாவோ நம்மிடம் 16.5தானே கேட்டார் என்று சிந்திக்கலானார். சற்று அந்த ஸ்லோகத்தை மீண்டும் மீண்டும் படிக்கையில், அதில் “சித்”தை பற்றிய விவரம் ஸ்லோகத்தில் இல்லாததையும் ஏகநாதரின் விவரணத்தில் உள்ளதையும் கண்டு விட்டார். இப்பொழுது அவரிடம் 16.5யும் கிடைத்து விட்டது.

ஆனாலும் காகாசாகேப் தன்னிடம் பாபா எதற்காக பதினாறு ரூபாய் கேட்காமல், எதற்காக அந்த அரை ரூபாயையும் சேர்த்து கேட்டார் என்று வியந்தார். பிறகு, காகாசாகேப் தான் தெரிந்து கொள்ள விரும்பியதை உணர்ந்தார். அது என்னவென்றால், எப்பொழுதும், நாம் சுய நினைவுடன்தான் பகவானுக்கு எதையும் சமர்ப்பணம் செய்வோம். ஆனால் ஏகநாதர் கூறுவது போல், சில செயல்கள், தானாகவே நம்முடைய ஸ்வபாவத்தை ஒட்டி அனிச்சையாகவே நடைபெறுகிறது. அவை நடைபெற எந்த தடையும் இருப்பதில்லை. அந்த செயல்கள் அனைத்திற்கும், தன்னிச்சை காரணமில்லை. பகவானின் வழி நடத்தலே காரணம்.

எல்லோருமே பகவானின் ஒரு கருவி மட்டுமே. அப்படி இருக்கையிலே, அனிச்சையாக நடைபெறும் செயல்களை, ஒருவன், தன் இச்சையாலேயே நடைபெறுவதாக கூற முடியாது. அதில் ஒரு பாகமே அவனுடையது ஆகும். இந்த தத்துவத்தை புரிய வைப்பதற்கே, பாபா காகாசாகேப் தீக்ஷித்திடம், பதினாறரை ரூபாயாக அரை ரூபாய் சேர்த்து கேட்டார். காகாசாகேப்பும் இது புரிந்து மகிழ்ச்சி அடைந்தார்.

## *சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**ஜூன் 26ஆம் தேதி**யன்று திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் அடி அண்ணாமலை அருகில் புதிதாக அமைந்துள்ள **விபூதி பாபா** மற்றும் ஷீரடி மஹாத்மாவிற்காக புதிதாக அமைந்துள்ள **மணிமண்டப கும்பாபிஷேக விழா**வில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள். அங்கு கூடியிருந்த திரளான அன்பர்கள் முன்னிலையில் விபூதிபாபா மற்றும் ஷீரடி மஹாத்மா ஆகியோரை பற்றி அருளுரை வழங்கினார்கள்.

**ஜூலை இரண்டாம் தேதி** முதல் எட்டாம் தேதி வரை ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் **ராமாயண உபன்யாசம் திருவண்ணாமலை ஸ்ரீயோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில்** ஏற்பாடாகி இருந்தது. எட்டாம் தேதியன்று யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம லைஃப் டிரஸ்டி ஜஸ்டிஸ் ஸ்ரீஅருணாசலம் அவர்கள் எழுதிய “என் குருவின் புனித திருவடிகளில்” என்ற நூலையும், திரு.மூர்த்தி ஈஸ்வரய்யா கன்னடத்தில் மொழிபெயர்த்த அன்னை விஜயலக்ஷ்மி அவர்களின் “அன்பின் அலைகள்” புத்தகத்தையும் வெளியிட்டார்கள்.

பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்கள் பூத உடல் தாங்கி அருள் பாலித்திருந்த சமயம், ஆஸ்ரமத்திற்கு நுழைவு வாயில் அமைய வேண்டும் என அணுக்க பக்தர்களிடம் விருப்பம் தெரிவித்திருந்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜியின் வழிகாட்டுதலின்படி, சைதன்யமஹாபிரபு நாம பிக்ஷாகேந்திரா மிக அழகாக கலை நுணுக்கங்களுடன் ஆஸ்ரம நுழைவு வாயிலை கைங்கரியமாக செய்திருந்தது. இதையும் பக்தர்கள் முன்னிலையில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**ஜூலை 9ஆம் தேதி**யன்று **முடிச்சூர் விவேகானந்தர் பள்ளி**யில் ஆசிரியர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாமில் திரு.மீனாக்ஷிசுந்தரம் அவர்களின் அழைப்பிற்கிணங்க ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு, அருளுரை வழங்கினார்கள். இவ்விழாவில் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

**ஜூலை 11ஆம் தேதி**யன்று **ஆஷாட ஏகாதசியை முன்னிட்டு விட்டலாபுரம் பாண்டுரங்கன் கோவிலில்** ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் விசேஷ பூஜையும்

நாமசங்கீர்த்தனமும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**ஜூலை 12ஆம் தேதி** மதுரபுரி ஆஸ்ரமம் அருகே உள்ள **மணிமங்கலம் அரசு உயர்நிலைப்பள்ளி**யின் விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள். ஸ்ரீஸ்வாமிஜியின் வழிகாட்டுதலின்படி, குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்டு (GOD டிரஸ்ட்) பல பணிகளை இப்பள்ளியில் செய்துள்ளது. (பார்க்க - இதழின் அட்டை உள்பக்க படங்கள்)

**ஜூலை 15ஆம்தேதி**யன்று மதுரபுரி ஆஸ்ரமத்தில் மிக சிறப்பாக **குரு பூர்ணிமா** கொண்டாடப்பட்டது. வேதகோஷங்களுடன் வியாசருக்கு பூஜை நடைபெற்றது. பின்னர் ஸ்ரீஸ்வாமிஜி காஞ்சி மஹாஸ்வாமிகளின் பாதுகைகளுக்கு பூஜை செய்து, வந்திருந்த சுமார் 1500 அன்பர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கினார்கள். குருபூர்ணிமாவை ஒட்டி பல நாமத்வார் மையங்களிலும் அகண்ட மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றது. ஸ்ரீரவிகாச்யப் மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்பில் ராமாயணம் குறித்து ஜூலை 12 முதல் 15 வரை உபன்யாசம் செய்தார்.

**ஜூலை 16ஆம் தேதி**யன்று சென்னை தியாகராய நகரில் அமைந்துள்ள **ஸ்ரீதாராசந்த் கலாடா ஜெயின் வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி**க்கு சென்று, ஸ்ரீஸ்வாமிஜி நாமகீர்த்தனத்தின் மகிமை குறித்து அருளுரையாற்றினார்கள். பள்ளி மாணவர்களுக்கு ஆசிகள் வழங்கி, பிரசாதமும் வழங்கினார்கள். மாணவர்கள் ஸ்ரீஸ்வாமிஜியின் முன்னிலையில், பகவத்கீதை பாராயணமும், மஹாமந்திர கீர்த்தனமும் செய்தனர்.

**ஜூன் 19** அன்று **விருத்தாசலம்** வரதராஜபெருமாள் கோவிலில் 270 அன்பர்கள் முன்னிலையிலும், **ஜூன் 25ஆம் தேதி**யன்று **பண்ருட்டி** பெருந்தேவி தாயார் சமேத வரதராஜ பெருமாள் கோவிலில் 120அன்பர்கள் முன்னிலையிலும் GOD டிரஸ்ட் சார்பாக மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. இதில் ராமானுஜம்ஜி மற்றும் கேசவன்ஜி ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். இதில்

ராமானுஜம்ஜி குருமஹிமை, நவவித பக்தி, சிரவணத்தின் மேன்மை, மஹாமந்திரத்தின் அவசியம் குறித்து உபன்யாசம் செய்தார். **ஜுலை 2**ஆம் தேதியன்று மழைக்காக **அணைக்கட்டு அருகே ஊனைபள்ளத்தூர்** கிராமத்தில் GOD டிரஸ்ட் சார்பாக அகண்டமாக மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றது. இதில் வெங்கடேஸ்வரன்ஜி கலந்து கொண்டு உபன்யாசம் செய்தார். பண்ருட்டியிலும் அணைக்கட்டிலும் கீர்த்தனம் நடக்கையிலே மழை கொட்டியது குறிப்பிடத்தக்கது.

**ஜுலை 2,3** தேதிகளில் **பாம்பே சார்டட அக்கவுண்டண்ட்ஸ் அசோசியேஷன்** சார்பில் மஹாமந்திர மெடிடேஷன் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி சார்பாக ராமானுஜம்ஜி மற்றும் குருமூர்த்திஜி கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள். கலந்து கொண்ட பலர் இதனால் மிக்க நன்மை அடைந்ததாக சொல்லி சென்றனர்.

rb rajmani builders

launches its new project

"rajmani's mathura"

at kolapakkam (near Porur)

56 well designed and ventilated
2/3 bhk homes at affordable prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

website: www.rajmanibuilders.com

## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

*- ஜனனி*

### தன்வந்தீ பாயி - 5

ஸித்த கௌராங்கதாஸ் பாபாவும் பாயிஜியிடம் மிகவும் அன்பாக இருப்பார். பாயிஜி அவருடைய ப்ரவசனங்களுக்கு அடிக்கடிச் செல்வார். அவரது உபந்யாஸங்கள் இல்லாத சமயங்களில் பாயிஜி கௌராங்கதாஸ் பாபாவின் இருப்பிடமான "ரமண்ரேதி" எனும் இடத்திற்குச் சென்று ஸத்ஸங்கம் செய்வார்.

ஒருமுறை கௌராங்கதாஸ் பாபாவின் ஆஸ்ரமத்தில் நடைபெறும் ஒரு உத்ஸவத்திற்கு ப்ரேமமாதுரீ பாயிஜியும் ஸ்ரீமதி சரண்ஜியும் அழைக்கப்பட்டிருந்தனர். உத்ஸவத்திற்கு பின்னர் ஒருவர் வைஷ்ணவர்களின் உச்சிஷ்ட ப்ரஸாதத்தை பாபாவிற்கு கொடுத்தார். பாபா, தான் அதை சிறிது எடுத்துக் கொண்டு, இவ்விருவருக்கும் அதில் சிறிது ப்ரஸாதத்தைக் கொடுத்தார். இருவரும் அதைப் பெற்றுக் கொண்டார்கள். சிறிது நேரம் கழிந்து அவர்கள் ஆஸ்ரமத்திலிருந்து திரும்புகையில், அவர்கள் இருவருக்கும் ஒரு அபூர்வமான ஆனந்த பரவசம் ஏற்பட்டது. மறுநாள் அவர்கள் இதைப் பற்றி பாபாவிடம் கூற, பாபா சொன்னார் , ஒன்று பரஸாதம் என்று அழைக்கப்படுவது. அது பகவான் முன் வைத்து நிவேதனம் செய்யப்பட்ட பொருள். இரண்டாவது மஹாப்ரஸாதம். இது பகவானுக்கு ப்ரேமையுடனும் உயர்ந்த பாவத்துடனும் அர்ப்பணம் செய்யப்பட்டது. இதை பகவானும் ப்ரேமையுடன் மிகவும் விரும்பி ஏற்கிறான். மூன்றாவது ஸத்ப்ரஸாதம், அதாவது ஸாதுக்களினால் உட்கொள்ளப்பட்டது. இதை நாம் உண்ணும்போது இதுபோன்ற அலௌகிகமான அனுபவங்கள் ஏற்படுகின்றன என்றார்.

ஸ்ரீகௌராங்கதாஸ் பாபாவும் எப்பொழுதாவது ஸுக பவனத்திற்கு வருவார். அங்கு சில சமயங்களில் உபந்யாஸமும் செய்வார். அங்கு வெளியில் ஒரு வேப்ப மரத்தடியில் அமர்ந்து அவர் உபந்யாஸம் செய்வார். அவருடைய கதைகளில் ஒரு அபரிமிதமான அப்ராக்ருதமான ரஸத்தின் மழை பொழியும் ; கேட்போரின் நெஞ்சத்தை அது கொள்ளை கொண்டுவிடும். மனிதர்கள் மட்டும் இல்லாமல் தாவர-ஜங்கமங்களும்

அவரது கதையை கேட்க ஆசைப்படும். அவர் ஸுக பவனத்தில் கதை சொல்லும் பொழுது, நித்யம் அதை கேட்க அங்கு ஒரு மயில் வரும். கதை ஆரம்பிக்கும் பொழுது அது கதை சொல்பவரையும் கேட்பவரையும் ப்ரதக்ஷிணம் செய்யும். இதற்காக சுவற்றோடு சாய்ந்திருக்கும் அன்பர்களை பாபா சற்று முன்னே வரச் சொல்வார். ப்ரதக்ஷிணம் செய்தபின், பாபாவின் நேரே எதிரே இருக்கும் ஒரு சுவற்றின் மீது அது சென்று அமர்ந்துவிடும். அங்கு அமர்ந்து கதை கேட்டு , கதை முடிந்த பின் பறந்து சென்றுவிடும்.

ஒருமுறை பாபா ஸுக பவனத்தில், ப்ருந்தாவன மஹிமாம்ருதத்தின் ப்ரவசனம் செய்து கொண்டிருந்தார். ஹோலி பண்டிகை நடுவில் வந்ததால், சிறிது காலம் கதைக்கு விராமம் அளிக்கப்பட்டது. அப்பொழுது பாயிஜியின் சில பெண் உறவினர்கள் அவருடன் தங்கியிருந்தனர். அவர்களையும், ஸ்ரீமதிசரண்ஜீயையும் அழைத்துக் கொண்டு, கோவர்த்தன கிரிராஜனின் பரிக்ரமா மார்க்கத்தில் உள்ள ஜதீபுரா எனும் கிராமத்தில், ஒரு வ்ரஜவாஸியின் இல்லத்தில் சிறிது நேரம் தங்கினார். ஹோலி பண்டிகைக்கு முன், அங்குள்ள வ்ரஜவாஸிகள் எல்லோரும் கூடி, கிரிராஜனின் அடிவாரத்திற்கு செல்வது என்பது அந்த க்ராமத்து மக்களின் வழக்கமாக இருந்தது. அதன் பின் கிரிராஜனை ஹோலி பண்டிகைக்கு அழைத்துவிட்டு, வீடு திரும்புவார்கள். பாயிஜியின் குழுவினர் என்றைய தினம் அந்த க்ராமத்திற்கு போய்ச் சேர்ந்தார்களோ, அன்றைய தினம்தான், அந்த க்ராமவாஸிகள் கிரிராஜனின் அடிவாரத்திற்கு புறப்படும் நாள். ஆதலால் இவர்களும் கிராமவாஸிகளுடன் சேர்ந்து கொண்டார்கள். அன்று எல்லோரும் கீர்த்தனம் செய்துவிட்டு கிரிராஜனுக்கு அழைப்பு விடுத்து விட்டு, எல்லோரும் சேர்ந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் பாயிஜி கிரிராஜனை தரிசிக்க, “இது நல்ல வாய்ப்பு. ஆனால் கிரிராஜன் ஹோலி விளையாட வருவானா என்ன!!” என்று கூறினார். நடந்தது என்ன?

(தொடரும்)

## மாலே மணிவண்ணா – 98

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

உயிர் என்பது புலன் ஆகாதது. உடலை வைத்துத்தான் உயிரை அறிகின்றோமே அன்றி, உயிரைத் தனித்து அறிந்தவர்கள், ஞானிகள் அன்றி, வேறு யாரும் இல்லை. இதனையே திருமூலர்,

*உடம்பார் அழியின் உயிரார் அழிவர்*

*திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்*

என்றார். இங்கே உயிரார் அழிவர் என்பது உயிர் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்துத் துன்புறும் என்ற கருத்து. உடம்பைப் பாதுகாத்தால் அதன் மூலம் நாவினால் இறைவன் திருநாமத்தைச் சொல்லி, கண்களால் அவன் திருவடிவம் தரிசித்து, கரசரணாதிகளால் அவனை வழிபட்டு, உயிர் வழுவிலா அடிமை செய்யும் பெரும்பேற்றைப் பெறலாம் அல்லவா? அதனால் தான் இறைவனை உயிர் பெறுவதற்கு உபகாரமான கருவியாக உள்ளவை உடம்பும் கருவிகரணங்களுமாகும் - அவைகளாகவே எம்பெருமான் உள்ளான். உயிரினிடத்தும் உடம்பிடத்தும் அவன் விளங்கி தோன்றாது மறைந்து நிறைந்து நிற்றலால், அவனே எல்லாமாக தத்துவ வடிவமாக, உயிராக இருக்கிறான் என்று பரிபாடல் சொல்கிற இக்கருத்து, வேதத்தால் சொல்லப்பெற்ற நுண்பொருள் தமிழ் வேதமாகிய ஆழ்வார்கள் அருளிச் செயல்களிலும் உறுதிபட வந்துள்ளது. திருவாய்மொழியில் நம்மாழ்வார்,

உடம்பைப் பாதுகாத்தால் அதன் மூலம் நாவினால் இறைவன் திருநாமத்தைச் சொல்லி, கண்களால் அவன் திருவடிவம் தரிசித்து, கரசரணாதிகளால் அவனை வழிபட்டு உயிர் வழுவிலா அடிமை செய்யும் பெரும்பேற்றைப் பெறலாம் அல்லவா?

*மாயன் என் நெஞ்சின் உள்ளான்*
*மற்றும் எவர்க்கும் அதுவே*
*காயமும் ஜீவனும் தானே*
*காலும் எரியும் அவனே,*
*சேயன் அணியன் எவர்க்கும்*
*சிந்தைக்கும் கோசரம் அல்லன்*
*தூயன் துயக்கன் மயக்கன்*
*என்னுடைத் தோளிணை யானே* (திருவாய். 1.9:6)

எம்பெருமானது திருநாமத்தை இடையறாது சொல்வதால் அவனது திருவடி அடிமையை பெறலாம் என்று சொல்ல வந்த ஆழ்வார், திருநாமத்தைச் சொல்ல நாக்கும், உடம்பும் தேவையல்லவா, அவைகளாக அந்தத் தத்துவங்களாக இருந்து உதவுபவனும் அவனே என்பதைக் கூறி, அந்தத் தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டவன் அவன் என்ற அப்பெருமானது தனி முதல் தன்மையையும் எல்லாம் அவன்; ஆனால் சேயன் எவர்க்கும் சிந்தைக்கு கோசரம் அல்லன் என்று அவனது அளப்பரும் தன்மையையும் உடன் சேர்த்துச் சொன்னார்.

*"மூலமும் அறனும் முதன்மையின் இகந்த*
*காலமும் விசும்பும் காற்றோடு கனலும்*

..........

*மூவேழ் உலகமும் நின்மருங்கின்று"*

என்று பரிபாடல் முன்னரே விளக்கச் சொல்லி வரும்போது விஷயாதிகளைச் சொன்னவர், அவற்றுக்கு மூலமாகிய பொறிகளைச் சொன்னார். ஞானேந்திரியம் கூறவே அவற்றோடு கன்மேந்திரியங்களும் சொல்லப்பட்டவை ஆயின. அவற்றுக்கெல்லாம் அடியாகிய ஐம்பூதங்களையும், அவற்றின் நுண்ணியல்புகளையும் எடுத்துக் காட்டினார். அந்தக்கரணமாகிய மனத்தையும் அகங்காரத்தையும் மூலப்பகுதியில் அடக்கி, "மூலமும்" என்று விளக்கினார்.

மூலப்பகுதி என்பது சாத்துவிகம், இராஜசம், தாமசம் என்னும் குணங்கள் மூன்றும் தம்முள் ஒத்த நிலைமை ஆகும். அவையிற்றால் உயிர்க்கு அறிவு, அறியாமை, இன்ப துன்பம் என்று அனைத்து உயிர்க் குணங்களும் ஏற்படும். "அறனும்" என்னும் சிறப்புடைக் குணம் சொல்லவே பாவமும் அடங்கியது. அறமாக இருப்பவனும் அவனே; பாவமாக இருப்பவனும் அவனே.

கம்பராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில் வாலிவதைப் படலத்தில் வாலியின் ஞானோதயப் பாடலைக் காணலாம்.

*ஏவு கூர் வாளியால் எய்து, நாய் அடியேனேன்*
*ஆவி யோம் வேலைவாய், அறிவு தந்து அருளினாய்;*
*மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!*
*பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ!* (கம்ப.4063)

இந்த பரிபாடற் கருத்தை, திரு அரங்க கலம்பகம் எடுத்த எடுப்பில் முதற் பாசுரத்திலேயே மிகத் தெளிவாக விளக்கியது.

*தேவர் ஆய், தேவர்க்கும் தெரியாத ஒளி உரு ஆய்*
*மூவர் ஆய், மூவர்க்கும் முதல்வன் ஆய், நின்றோய், நீ!*
*கருதரிய உயிர்க்கு உயிராய்க் கலந்து, எங்கும் பரந்து, உறையும் ஒருதனி நாயகம் என்றால், உன் புகழ்க்கு வரம்பாமோ?*
*நஞ்சமும் அமுதமும் நரகும் வீடும் ஆய்*
*வஞ்சமும் ஞானமும் மறப்பும் ஆயினை;*
*இரு வினைப் பகுதியும் இன்ப துன்பமும்*
*கருணையும் வெகுளியும் கருத்தும் ஆயினை*

எல்லாவற்றோடும் கலந்து, மறைந்தும் நிறைந்தும் உள்ள அவனே, எல்லாமாக இருக்கிறான். பகவத் கீதை 11ஆம் அத்தியாயத்தில், விசுவரூப தரிசனத்தில் எம்பெருமானே எல்லாமாக இருக்கும் காட்சி நன்கு விளக்கப்படுகிறது.

(தொடரும்)

## அப்பாலுக்கு அப்பால்

## அல்லமபிரபு -5

எப்படி தமிழ்நாட்டில் நாயன்மார் சரித்திரங்களில் சுந்தரர் முதன்மையானவரோ (அவர் கொண்டுதான் தொண்டர் புராணம் தொடக்கம். அவரிலேயே முடிகிறது) அப்படியே அல்லமரின் சரித்திரத்தையும் சிவசரணர்களின் சரித்திரத்தில் ஒப்ப வேண்டும். எப்படி மாணிக்கவாசகருக்கு குரு வடிவாக இறைவன் நேரில் வந்து தரிசனம் தந்தானோ, அப்படித்தான் அல்லமரின் வாழ்வில் வந்த அனிமிச யோகீச்வரரையும் கொள்ள வேண்டும்.

அல்லமர் அனிமிச யோகீஸ்வரரை சந்திப்பதற்கு முன், கோகய்யா என்ற தோட்டக்காரரை சந்தித்தார். கோகய்யா தோட்டங்களை மிக நன்றாக பயிரிட்டு வந்தார். அதிலேயே மிக்க திருப்தியும் கொண்டிருந்தார். ஞானிகள் எவரையும் ஆன்ம விஷயத்தில் திருப்புவதற்குத்தானே பார்ப்பார்கள்? அதற்கு முகாந்தரம்தான் தேவை. அப்படித்தான் இந்த கோகய்யாவிடம் அல்லமர் "உங்களை விட நான் நன்றாக பயிரிடுகிறேன்" என்றார். அல்லமர் சொன்னது மனதை பண்படுத்துவதுதான். நிலத்தை பண்படுத்துவதை விட மனத்தை பண்படுத்துவதே உயர்ந்தது என்று அவருக்கு விளக்கினார். அல்லமரின் உபதேசப்படி வாழ்ந்து கோகய்யாவும் ஆன்மீகத்தில் முன்னேறினார்.

அனிமிசரை பார்த்த பின், அல்லமருக்கு தமது அவதார காரியம் என்ன என்று விளங்கலாயிற்று. அவர் "நம்பிக்கையின் மூலம்தான் ஒருவன் பக்தனாக முடியும். அது திடமாகும்போழுது அவன் இறைவனிடம் இருந்து பிரசாதமான அருளை பெற்று பிரசாதியாகிறான். அனுபவம் பக்தனுக்கு ஸ்திரமாகும்போழுது அவனுள் இறைவன் பிரதிஷ்டை ஆகிறார். அனுபவம் எப்படி கிடைக்கிறது என்பதை அறிவதன் மூலம் பக்தர் பூரணமான சிவசரணர் ஆகிறார்" என்று உபதேசங்களை சொல்லியவாறே பல தேசங்களுக்கு சென்று வந்தார்..

அல்லமர் இல்லையெனில் இனி பார்க்க போகிற முக்தாயக்கா, அக்க மகாதேவி, பசவர், சித்தாராமர், சென்ன பசவண்ணா போன்றவர்களின் சிறப்பு வெளி வர வாய்ப்பு இல்லை. ஒவ்வொரு இடத்திலும் அவர்களுக்குள் ஒளிந்திருக்கும் மேன்மையை அல்லமர்தான் வெளிப்படுத்துகிறார். சிற்சில சமயங்களில் சிறு சோதனைகளின் மூலம்,

அவர்களை மாற்றுவார். சில சமயங்களில் அச்சோதனைகளின் மூலம், பக்தர்களின் மகிமையை சமயத்தில் வெளி உலகத்திற்கு கொண்டு வருவார். இது அல்லமரின் பாணி எனலாம்.

வீர சைவ மதத்தின் கதாநாயகர் பசவேஸ்வரர் என்றால், அல்லமர் அம்மதத்தின் உயிர். பசவேஸ்வரரின் பரந்த மனதின் முன்னால் அல்லமர் தன் ஞானம் ஒன்றும் அல்ல என்கிறார். ஆனாலும் தகுந்த சமயங்களில் பசவேஸ்வரருக்கும் உபதேசம் செய்ய தவறியதில்லை அவர். காரணம் பசவருக்கு அல்லமர், ஒருவகையில் குருவும் கூட. பசவரும் ஒருமுறை கூட அல்லமருக்கு தகுந்த மரியாதையை செய்ய தவறியதில்லை.

அதேபோல் சித்தராமேஸ்வரர் என்ற புகழ்பெற்ற சிவ சரணரை காண்கையில் அல்லமர் அவரின் யோக நிலைகளை கண்டு வியக்கிறார். (அல்லமரே ஹட யோகத்திலும் ராஜயோகத்திலும் மிக்க பரிச்சயம் மிக்கவர்தான். இமயத்தில் பின்னாளில் நெடுங்காலம் தவம் செய்தவர்.) ஆனால் சித்தராமேஸ்வரரை பார்த்தவுடன், அவர் அஷ்ட மகாசித்திகளை தாண்ட வேண்டும் என்பதற்காகவே அவரிடம் கடுமையாக நடந்து கொள்கிறார். முடிவில் தனது இலட்சியத்தில் அல்லமர் வெற்றியும் பெறுகிறார்.

அக்கமஹாதேவி எனும் பக்தையை பார்த்தவுடனேயே அல்லமருக்கு அவரது ஞானம் புரிந்து விடுகிறது. இருந்தாலும் அதை வெளிக்காட்டவில்லை. காரணம், தான் அக்கமஹாதேவியை எப்படி புரிந்து கொண்டிருக்கிறாரோ, அப்படியே மற்றவரும் அக்கமஹாதேவியை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மகாதேவியை சிறு சங்கடத்துக்கு உள்ளாக்குகிறார். அல்லமர் இப்படி தகுந்த இடங்களில் தான் ஒரு பெரிய அவதாரம் என்பதை அவ்வப்போது காட்டினாலும் பழகுகையில் தமது கருத்தையே முழுக்க வெளிப்படுத்தாமல் இருப்பார்.

அஜகண்ணா என்ற ஒரு சிவபக்தர் வாழ்ந்து வந்தார். அவரது தமக்கை முக்தாயக்கா என்பவள். முக்தாயக்காவிற்கு அஜகண்ணாவே குருவாக இருந்து வந்தார். அஜகண்ணா தமது பக்தி வெளியில் யாருக்கும் தெரியாதபடி, பரம ஏகாந்தியாக மனதினுள் மட்டுமே

பரசிவத்தை பஜித்து வந்தார். அவரின் உபதேசங்களினால் முக்தாயக்காவும், ஒரு பவித்திரமான வாழ்க்கை வாழ்ந்து வந்தாள். அதனால், அவள் மிக உயர்ந்த நிலையை எட்டி இருந்தாள். அஜகண்ணர் தாம் ஜபித்து வந்த மந்திரத்தை பக்தி மேலீட்டால் ஒருமுறை உரக்க சொல்லி விட்டார். அது அவருக்கு பொறுக்கவில்லை. தாம் பொக்கிஷமாக வைத்திருந்தது வெளியில் தெரிந்து விட்டதே என்று வருந்தினார். அவருக்கு நேர்ந்த ஒரு சிறு விபத்தை காரணமாக முன்னிட்டு, தாமாகவே அஜகண்ணர் பிராணனை விட்டார்.

முக்தாயக்கா இதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு அண்ணன் பிரிந்தார் என்பதில் ஒன்றுமில்லை. அஜகண்ணர் குருவாயிற்றே? அவளுக்கு அஜகண்ணர் மேல் அபார பக்தி இருந்தது. இதே சமயத்தில், அல்லமருக்கு முக்தாயக்கா வாடுவது தம் ஞானக்கண்களில் தெரிந்தது. அஜகண்ணர் வாழ்ந்த வீடு நோக்கி அவர் நடந்தார்.

(தொடரும்)

**சனாதனப் புதிர் : பகுதி – 29** விடைகள் –ஆத்ரேயன்

1. தர்மம் - நன்மை; பொறுமை - அமைதி: வித்தை - திருப்தி: அஹிம்சை – சுகம்:
2. செல்வந்தனாக இருந்தும் பொறுமையுடன் இருப்பவன்; ஏழ்மையிலும் தானம் செய்பவன்.
3. காமம்; குரோதம்; லோபம்;
4. தேவதைகளின் சங்கல்பம்; புத்திமான்களுடைய மஹிமை: கல்வி கற்றவர்களின் அடக்கம்; பாபிகளுடைய நாசவேலை.
5. மாதா, பிதா, அக்னி, ஆத்மா, குரு - இந்த ஐவரும் அக்னியாக கருதப்படுகிறார்கள்.

மதுரமுரளி சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/-ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு அணுகவும்:

PH: +91-44-24895875

Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

## ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஆகஸ்டு 21-30 | கோகுலாஷ்டமி உத்ஸவம் - மதுரபுரி ஆஸ்ரமம் |
| செப்டம்பர் 12 | சைதன்யகுடீரம் ஆண்டு விழா |
| ஏகாதசி | ஆகஸ்டு 9, 25 செப்டம்பர் 8, 23 |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.